## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை – 2016

---

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, கூட்டுஆதன முகாமைத்துவ அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கி உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

2015 ஆண்டிற்கான பணிக்கொடை மற்றும் பெறுமானத்தேய்வு தொடர்பாக உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையே ரூபா 650,410 இற்கான மற்றும் ரூபா 187,907 இற்கான சீராக்கல்கள் மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சலுடன் சீராக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தொகை ரூபா 1,130,822 இற்கான முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் பெறுமதியொன்று மீளாய்வாண்டிற்கான நிதித் தொழிற்பாடுகள் மீது காசுப் பாய்ச்சலுடல் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

சொத்தொன்றின் பயன்தரு ஆயுட்காலத்தை, ஒவ்வொரு ஆண்டினதும் அறிக்கையிடும் காலப்பகுதியொன்று முடிவடையும் திகதியில் மீளாய்வு செய்து கணக்கீட்டு மதிப்பீடு வித்தியாசம் ஒன்றென கணித்து பெறுமானத்தேய்வு செய்வதற்கு இயலுமான காலப்பகுதி மீளாய்வு செய்யப்பட வேண்டுமெனினும் அதிகார சபையினால் தேய்மானம் கழித்து முடிவடைந்திருந்த போதிலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் கூட்டுத்தொகை ரூபா 20.89 மில்லியனிற்கான சொத்துக்கள் தொடர்பாக நியமத்திற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

இருப்பு பெறுமதி கணிக்கப்பட வேண்டியது கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதிக்கேயாகும். எனினும் அதிகார சபையினால் அதற்கு இணங்காமல் இருப்பு தொடர்பாக கொள்கையொன்று தயாரித்து நிகர தேறிய பெறுமதி கணிக்கப்படாமல், கிரயத்தின் மீது இருப்பின் பெறுமதி கணிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 ஆண்டின் போது கொடுப்பனவு செய்திருந்த அலுவலக வாடகைக்காக மீண்டும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அலுவலக வாடகைக் கணக்கு மற்றும் அட்டுறு அலுவலக வாடகைக் கணக்கு ரூபா 115,802 இனால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆண்டின் போது ஓய்வுபெற்றிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 315,418 இற்கான பணிக்கொடை தொகையினை மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு அல்லது நடைமுறை பொறுப்புக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

அதிகார சபையினால் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கூட்டுத்தொகை ரூபா 262.99 மில்லியனுக்கான சீராக்கல்கள் தொடர்பாக நாட்குறிப்பு உறுதிச்சான்றுகள் தயாரித்திருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 25.83 மில்லியன் தொகையான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் முன்கொண்டு வரப்பட்டு வரும் 8 கடன்பட்டோர்களிடம் பெற வேண்டிய மீதி ரூபா 3.05 மில்லியன் தொகையாகும். மேலும் கடன்பட்டோர் மீதியை உறுதிப்படுத்துவதற்காக மீதிகளை உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாணவேலைகள் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 4.65 மில்லியன் இற்கான மீதியில் ரூபா 1.37 மில்லியன் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆண்டின் போது அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுவதற்காக அதிகார சபைக்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச சபையினால் வழங்கியிருந்த ரூபா 350,568 இற்கான முற்பணத் தொகை 2017 மே மாதம் இறுதி வரை தீர்த்திருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2003 இன் 24 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் 5 ஆம் பந்தியின் (ஏ) ஆம் பிரிவு | கூட்டு ஆதனங்களின் பொது வசதிகளை பராமரித்தல் விடயங்கள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சாட்டப்பட வேண்டியிருந்த போதிலும் மாளிகாவத்தை மற்றும் ஜல்தர வீடமைப்புத் திட்டங்களின் பொது வசதிகள் பராமரிப்பு விடயங்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு சாட்டப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | உழைக்கும் போதே வரி கணிக்கும் போது அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் படி மற்றும் தொலைபேசிப் படி வரி அறவிடப்படக் கூடிய வருமானத்திற்கு சேர்க்கப்பட வேண்டுமெனினும், அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த எரிபொருள் படி மற்றும் தொலைபேசி படி என்பன சீராக்கப்படாமல் உழைக்கும் போதே வரி கணிக்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தானக் கோவை | |
| (i) II ஆம் அத்தியாயம் 13.3 ஆம் பந்தி | நிரந்தர நியமனம் ஒன்று மேற்கொள்ளும் வரை தற்காலிக நடவடிக்கை ஒன்றாக மாத்திரமே பதில் கடமை நியமனம் செய்யப்பட வேண்டுமெனினும் அதிகார சபையின் 08 பதவிகளுக்காக பதில் கடமை நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பதில் கடமையாற்றும் காலம் 04 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரை பரவிக் காணப்பட்டது. அதிகார சபை 2016 ஆண்டின் போது பதில் கடமைப் படியாக ரூபா 501,097 தொகை கொடுப்பனவு செய்திருந்தது. |
| (ii) VIII ஆம் அத்தியாயத்தின் 9.2 ஆம் பந்தி | ஒரே கடமைக் காலத்திற்காக விடுமுறை நாள் படி (1/30) மற்றும் மேலதிக நேரப் படி ஆகிய இரண்டு படிகளும் செலுத்த முடியாத போதிலும் அதற்கு இணங்காமல் 2010 அக்தோபர் 29 திகதிய CMA/4/1/3/7 (கா.நி) இலக்க அதிகார சபையின் பொது முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் ஒரே சேவைக் காலத்திற்காக அலுவலக உதவியாளர், கணக்கு உத்தியோகத்தர்கள், பொறுப்பாளர், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலக தொழிலாளர்கள் போன்ற தரத்தினருக்கு இரண்டு படிகளும் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு மேலதிக நேரப் படிக்கு மேலதிகமாக செலுத்தியிருந்த விடுமுறை நாள் சம்பளம் ரூபா 1.68 மில்லியானகும். |

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

-----------------------------------------------------------

(i) நிதிப் பிரமாணங்கள் 371(2)(அ) மற்றும் 2015 ஜூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் குறிப்பிட்ட வேலைக்கான துணைக் கட்டுநிதி வழங்கப்பட வேண்டுமெனினும், அதிகார சபையினால் அதற்கு இணக்கமின்றி பதவிநிலை அல்லாத உத்தியோகத்தர்களுக்கு 87 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 990,008 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 571

செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்ட நாள் முதல் 02 வருடங்களை மிகைத்துள்ள பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் தடுத்து வைத்தல் பணம் முறையே ரூபா 655,487 தொகை மற்றும் ரூபா 3,470,000 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) நிதிப் பிரமாணம் 757(2) மற்றும் 2016 மார்ச் 31 ஆம் திகதிய 5/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி

2016 ஆண்டின் பொருட்கள் கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 14 பிரிவுகளில் 72 விடயங்களில் பற்றாக்குறை மற்றும் 62 விடயங்களில் மிகைகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவை

-----------------------------------------------------------

(i) 2.8.1 ஆம் பந்தியில் (ஆ)

விடயம் தொடர்பான சிறப்பு தேர்ச்சியுடைய ஒருவர் தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவில் அடங்கப் பெற வேண்டுமெனினும் கூட்டாட்சி கைநூல் அச்சிடுவது தொடர்பான தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவில் விடயம் தொடர்பான சிறப்பு தேர்ச்சியுடையவர்கள் அடங்கியிருக்காததுடன் சிரேஷ்ட பொறியியல் உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதில் அடங்கியிருந்தனர்.

(ii) 4.2.1 ஆம் பந்தி

விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், குறைந்த அளவு 03 வருட காலப்பகுதிக்காக எதிர்ப்பார்க்கும் பெறுகைகள் விடயங்கள், முக்கிய பெறுகைகள் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 8.9.1 ஆம் பந்தி

ரூபா 500,000 தொகை பெறுமதியினை மிகைக்கும் பண்டங்கள் மற்றும் சேவைகள் ஒப்பந்தமொன்றிற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 1.66 மில்லியன் பெறுமதியான கூட்டாட்சி கைநூல் அச்சிடும் விடயம் தொடர்பாக இரண்டு சாராரினாலும் உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2003 ஜுன் 02 ஆம் திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

-------------------------------------------------------------

| | |
|---|---|
| (i) 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுள் அவ்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டிற்கான வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) 8.2.2 ஆம் பந்தி | நிதியறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 55 மில்லியனுக்கான ஏழுநாள் வைப்பு தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. |
| (iii) 8.3.8 ஆம் பந்தி | குறிப்பிட்ட சுற்றறிக்கைக்கு இணக்கமின்றி மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 8.75 மில்லியன் தொகை நன்கொடைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. |

(எ) பொது நிதிச் சுற்றறிக்கை

-------------------------------------------

| | |
|---|---|
| (i) 2015 ஜுலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | பெற்றுக்கொண்டிருந்த கட்டுநிதியொன்று அவ்விடயம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டுமெனினும், 79 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த ரூபா 1.39 மில்லியன் துணைக் கட்டுநிதிகளைத் தீர்ப்பதில் 17 நாட்கள் முதல் 115 நாட்கள் வரையான கால தாமதமொன்று காணப்பட்டது. அவ்வாறு தாமதித்திருந்த உத்தியோகத்தர்களின் ஆரம்ப கட்டுநிதியை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் கட்டுநிதிகள் வழங்கியிருந்த சந்தர்ப்பங்களும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. |
| (ii) 2009 நவம்பர் 13 ஆம் திகதி 438 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | 2016 ஆண்டின் போது அகற்றப்படும் அனைத்து பண்டங்கள் தொடர்பான அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (iii) 2009 ஜுலை 21 ஆம் திகதிய பீஎப்/439 ஆம் இலக்க சுற்றறிக்கை | பாவணையில் இருந்து அகற்றப்பட்டிருந்த டயர்களை ஏல விற்பனைக்குச் சமர்ப்பிக்காமல் கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் காணப்படும் கரையோர பேணல் திணைக்களத்திற்கு ஒப்படைக்க வேண்டுமெனினும், அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது 32 டயர்கள் அழிக்கப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஏ) அதிகார சபையில் சிரேஷ்ட முகாமைத்துவ ஆட்சேர்ப்பு நடைமுறையின் 8.2 ஆம் பந்தி | அதிகார சபையின் பொது முகாமையாளர் சேர்க்கப்படும் வயது எல்லையின் வரையறை 45 வருடங்களை விட மிகையாக இருக்கக் கூடாது எனினும், அதற்கு இணக்கமின்றி 45 வருடங்களை விட கூடிய ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகார சபையின் மிகை ரூபா 70.41 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21.97 மில்லியனாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 48.44 மில்லியனிற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சம்பளம் செலுத்துவதற்காக திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த நிதியேற்பாடுகள் ரூபா 11 மில்லியனினால் குறைந்திருந்த போதிலும், செயற்பாட்டு வருமானம் ரூபா 76.8 மில்லியனினால் அதிகரித்திருந்தது மேற்கூறிய முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டினது மற்றும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை மீளாய்வு செய்யும் போது 2013 ஆண்டின் நிதி விளைவுகளில் பற்றாக்குறை ஒன்று காட்டிய போதிலும் ஏனைய ஆண்டுகளில் மிகையொன்றினை பெற்றிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் அரசுக்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் நிறுவனத்தின் ஒட்டுமொத்தப் பங்களிப்பு 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை முன்னேற்றமொன்றினை காட்டியிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது அம் முன்னேற்றம் 53 சதவீதமாகும்.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கூட்டாட்சி ஆதனங்களுக்காக சான்றிதழ்கள் வழங்குதல் மூலம் வருமானம் ரூபா 83.66 மில்லியனினால் அதாவது 107 சதவீதத்தினால் அதிகரித்திருந்த காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு வருமானம் ரூபா 76.8 மில்லியனினால் அதாவது 72 சதவீதத்தினால் முன்னேறியிருந்தது. அதே போல் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் அதிகரித்தல் காரணத்தினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்படாத வருமானம் ரூபா 6.16 மில்லியனினால் அதாவது 120 சதவீதத்தினால் முன்னேறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதிகார சபையின் தேறிய சொத்துக்கள் ரூபா 102.79 மில்லியனாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் தேறிய சொத்துக்கள் ரூபா 33.51 மில்லியன் ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தேறிய சொத்துக்கள் ரூபா 69.28 மில்லியன் இனால் வளர்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டில் அதிகார சபை ரூபா 70.41 மில்லியன் மிகையொன்றினை பெற்றிருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு அடிப்படையாகக் காரணமாகியிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நடைமுறை சொத்துக்களின் விகிதாசாரம் 1.7:1 ஆகக் காணப்பட்டதுடன் கடந்த அண்டின் போது அவ் விகிதாசாரம் 1.2:1 ஆகக் காணப்பட்டது. அதே போல் மீளாய்வாண்டின் போது விரைவுச் சொத்து விகிதாசாரம் 1.6:1 ஆகக் காணப்பட்டது. 2015 ஆண்டின் போது அவ் விகிதாசாரம் 1.2:1 ஆகக் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கூட்டு ஆதனங்களின் பொது வசதிகள் முகாமைத்துவம், பராமரிப்பு, கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் செய்தல் என்பவற்றை உரிய முறையில் நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவ கூட்டிணைப்புகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் அதற்காக உதவுதல் மற்றும் பராமரிப்பை புறக்கணிக்கும் சந்தர்ப்பங்களில் நேரடியாக தலையிடுதல் என்பவற்றை 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதனங்கள் முகாமைத்துவ அதிகாரச சபைச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையின் பிரதான குறிக்கோளாகும். அதிகார சபையின் செயலாற்றுகை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் முகாமைத்துவக் குழுக்களை பதிவுசெய்தல் எண்ணிக்கை 75 ஆகக் காணப்பட்ட போதிலும், 2016 ஆண்டின் 33 முகாமைத்துவக் குழுக்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் முன்னேற்றம் 44 சதவீதமாகும்.

(ஆ) 2016 ஆண்டின் போது அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளை இனங்கண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்பாக உரிய தரப்பினருக்கு அறிவித்து அவர்களுக்கு நியாயமான காலம் ஒன்று வழங்கப்பட்டு 75 நிர்மாண வேலைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்காக மற்றும் அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதென திட்டமிட்டிருந்த போதிலும் 2016 ஆண்டின் போது அகற்றப்பட்ட உண்மையான அங்கீகாரமற்ற நிர்மாணவேலைகளின் எண்ணிக்கை 05 ஆகும். அதே போல் 2016 ஆண்டின் போது அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த தொகை மதிப்பு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 80 கூட்டு ஆதனங்களை காப்புறுதி செய்வதற்காக முகாமைத்துவக் கூட்டிணைப்புக்களை ஊக்குவிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 56 ஆதனங்கள் மாத்திரம் காப்புறுதி செய்திருந்ததுடன் ஏனைய ஆதனங்களை காப்புறுதி செய்வதற்காக முகாமை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2017 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரமும் 160 கூட்டாட்சி ஆதனங்களை காப்புறுதி செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதாக திட்டமிடப்பட்டிருந்தது.

(ஈ) சுனாமி பேரழிவிற்கு ஆளாகிய பொது மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 112 கூட்டாட்சி வீடமைப்புத் திட்டங்களுக்காக ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடுகள் மீது கூட்டு ஆதனங்களை பதிவு செய்யும் சான்றிதழ் வழங்குவது இலக்காக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அவற்றில் ஒரு சான்றிதழ் ஏனும் வழங்குவதற்கு அதிகார சபைக்கு இயலாதிருந்தது.

(உ) 1973 இன் 11 ஆம் இலக்க இணை வீடுகளின் உரிமைச் சட்டத்தின் திருத்த விடயங்கள் 05 கட்டங்களின் கீழ் அதாவது அறிஞர்களின் குழு அமர்வுகள் நடாத்துதல், திருத்திய வரைவு அறிக்கையை பூர்த்தி செய்தல், அமைச்சரவை அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல், வர்த்தமானியில் வெளியிடுதல், பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல் போன்றவற்றை செயற்படுத்தி 2015 நவம்பர் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு 2015 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்விடயங்கள் செயற்படுத்தப்பட்டிருக்காமையால் 2016 செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 நவம்பர் மாதத்தில் மேற்கூறிய விடயங்களை பூர்த்தி செய்வதற்கு மீண்டும் திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவில் அறிஞர்கள் குழு நியமிக்கப்பட்டு 2016 திசெம்பர் மாதத்தில் ஒழு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஊ) அதிகார சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், இலக்காகிய முகாமைத்துவ கூட்டிணைப்பு பிரதிநிதிகள் கூட்டம், கொழும்பு மாவட்ட பிரதேச செயலாளர்களிடையே விழிப்புணர்வு செயலமர்வு, கொழும்பு மாவட்ட உள்ளூராட்சி பிரதி நிதிகளை விழிப்புணர்வு செயலமர்வு மற்றும் ஆதன அபிவிருத்தியாளர்களின் கூட்டம் என்பன மீளாய்வாண்டின் போது நடத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

அதிகார சபைக்கு தேவையான 02 வகையான பண்டங்களில் 750 விடயங்களைப் பெற்றுக்கொள்வதற்காக 1999 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 2.02 மில்லியன் கொடுப்பனவு செய்திருந்த போதிலும் ரூபா 1.22 மில்லியன் பெறுமதியான 545 விடயங்கள் 2000 ஆண்டின் போது அதிகார சபைக்குக் கிடைத்திருந்தது. மீதியான பண்டங்கள் கிடைக்காத காரணத்தினால் 2006 ஆண்டின் போது அதிகார சபையினால் தாக்கல் செய்திருந்த வழக்கு தொடர்பாக நீதிமன்றம் வழங்கியிருந்த தீர்ப்பின் பிரகாரம் செயற்பட்டு குறிப்பிட்ட பணத்தை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் அதிகார சபையினால் கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவ கூட்டிணைப்புக்கள் சுறுசுறுப்பாக நடத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அதிகார சபையினால் நிறுவப்பட்டிருந்த 872 முகாமைத்துவ கூட்டிணைப்புக்கள் 427 தொகை அதாவது 49 சதவீதம் செயற்படாத நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2016 மே 25 திகதிய 108 ஆவது முகாமைத்துவ சபை கூட்ட தீர்மானத்தின் மீது அதிகாரச் சபையின் தலைவரினால் எழுதப்பட்ட “கூட்டாட்சி ஆதனங்களில் கழிப்புடனும் சுகதேகியாகவும் வாழக்கூடிய பாங்கு” என்ற பேரில் ஆக்கம் ஒன்றினை வெளியிடுவதற்காக மற்றும் அதனது அச்சுசெலவு அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு அந்த செலவினங்களை மீளளிப்பு செய்வதற்கு தீர்மானித்திருந்த போதிலும் அதிகார சபையினால் ரூபா 1.67 மில்லியன் செலவு ஒன்று மேற்கொண்டு “Condominium Living The Emerging Trend” என்ற பேரில் ஆங்கில மொழி மூலம் புத்தகமொன்று அச்சிடப்பட்டிருந்தது. இதன் ஆசிரியர் உரிமை தலைவருக்குரியதாக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை அச்சு செலவுகளை தீர்ப்பதற்கும் அதிகார சபைக்கு இயலாதிருந்தது.

## 4.4 நிதியங்கள் குறைவாகப் பயன்படுத்தல்

நகமு புரவர செயற்திட்டத்தின் கீழ் 03 தொடர்மாடி வீடுகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்துவதற்காக 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது திறைசேரியில் இருந்து ரூபா 80 மில்லியன் கிடைத்திருந்ததுடன் எதிர்பார்த்த விடயங்களை உரிய முறைப்படி நிறைவேற்றுவதற்காக முடியாமையின் காரணமாக ரூபா 32.7 மில்லியன் தொகை எதுவித விடயங்களுக்கும் பயன்படுத்தப்படாமல் 2016 ஆண்டின் போது அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 47 ஆம் பிரிவுக்கு இணக்கமின்றி அதிகார சபையினால் 2006 ஜனவரி மாதம் முதல் 2013 திசெம்பர் வரையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தை கணிக்கும் போது வாழ்க்கைச் செலவுப் படியினை சேர்த்திருக்காமையால் அக் காலப்பகுதிக்காக அதிகார சபையினால் செலுத்தியிருந்த ரூபா 11.18 மில்லியன் தொகை நிலுவை ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிலுள்ள ஊழியர்களின் பங்காகிய ரூபா 4.47 மில்லியன் தொகையினை குறிப்பிட்ட ஆட்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், அந்த நிலுவை தொகை தொடர்பாக ரூபா 6.36 மில்லியன் மிகைவிதிப்புத் தொகையொன்று செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேரிட்டிருந்ததுடன் 2016 ஆண்டின் போது அதற்காக ரூபா 2.94 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் முறையே 139 மற்றும் 103 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடங்களில் எண்ணிக்கை 36 ஆகும்.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, அமைப்பு வரைபடம் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறை என்பவற்றின் படி சட்ட விடயங்களுக்காக உதவி பொது முகாமையாளர் பதவிகள் இரண்டிற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் ஒரு பதவிக்காக மாத்திரம் நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தார். 2008 ஆண்டு முதல் நாளாந்தக் கொடுப்பனவு அடிப்படையில் மேலும் சட்ட அலுவலர் சேவையும் பெறப்பட்டிருந்ததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அந்த சட்ட உத்தியோகத்தரின் கருமங்களுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 443,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நகர வடிவமைப்பாளர் பதவி அங்கீகரித்திருக்காத போதிலும், 2009 ஆண்டு முதல் பட்டய நகர வடிவமைப்பாளர் ஒருவர் ஆலோசகர் ஒருவராக அதிகார சபையின் விடயங்களுக்காக நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதன் பிரகாரம் சேவையின் முக்கியத்துவத்தை கவனத்தில் எடுத்து ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தி அமைப்பதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2016 ஆண்டின் போது அவ் உத்தியோகத்தருக்காக அதிகார சபையினால் ரூபா 207,000 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும் அவரின் செயலாற்றுகை தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் அதிகார சபையினால் பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவரின் சேவை பெறப்படுவதுடன் அதற்காக 2016 ஆண்டின் போது ரூபா 129,000 இற்கான செலவு ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் அந்நியமனம் தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் அல்லது நியமனக் கடிதமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) அதிகார சபையின் பிரதி பொது முகாமையாளர் (ஒழுங்கமைத்தல்) பதவி மற்றும் 03 உதவி பொது முகாமையாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படல் நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு நேரடியாக பாதித்திருக்கவில்லை என கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

(உ) வெற்றிடமாகக் காணப்படும் 24 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 06 ஆரம்ப நிலை பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சேர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.7 வாகனப் பாவனை

அதிகார சபையினால் பழைய வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 1998 மற்றும் 1999 ஆண்டுகளின் போது ரூபா 8.93 மில்லியன் கிரயத்திற்கு பெற்றிருந்த 3 கப் வண்டிகளின் பராமரிப்பு விடயங்களுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 2.47 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் 1995 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 690,000 தொகைக்கான டிரக்டர் வண்டி மற்றும் டேலரின் பராமரிப்பு விடயங்களுக்காக 2016 ஆண்டின் போது ரூபா 205,649 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டத்தின் உட்படுத்தப்பட வேண்டிய வருடாந்த பெறுகைகள் திட்டம், மனித வள அபிவிருத்தித் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன இதில் அடங்கியிருக்கவில்லை.

(ஆ) 1973 இன் 10 ஆம் இலக்க கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபைச் சட்டத்தினை திருத்தியமைத்தல் வேலைகள் 2015 ஆகஸ்ட் மாதத்தில் முடிவாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2016 பெப்ரவரி வரை அதனது காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை அவ்விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் குறிப்பிட்ட சட்டம் சட்டவரைவுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி பாதீட்டு மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைகளிடையே 15 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.3 வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பித்தல்

அதிகார சபையினால் 2013 , 2014 மற்றும் 2015 ஆண்டுகள் தொடர்பான வருடாந்த அறிக்கைகளை மீளாய்வாண்டு இறுதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------- |
| (அ) | கூட்டு ஆதன முகாமைத்துவம் | முகாமைத்துவ கூட்டிணைப்புக்களின் மேற்பார்வை முறைப்படி காணப்படாமை. |
| | | கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகளை சாட்டுதல் விடயங்கள் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமை. |
| | | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள் தொடர்பாக ஆவணங்கள் பேணப்படாமை. |
| (ஆ) | பதிவேடுகள் பேணப்படாமை | பொருட் பதிவேடுகள் பேணப்படாமை. |
| | | தொலைபேசி, நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக பதிவேடுகள் பேணப்படாமை. |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | முறையான படிவமொன்று மற்றும் கட்டுப்பாடின்றி கட்டுநிதி விண்ணப்பித்தல் மற்றும் செலவு செய்தல். |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | வாகனங்களுக்கான ஓட்ட அட்டவணைகள் முறைசார் விதமாக பேணப்படாமை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்காமை. |
| | | பெறுமதியினை வருடாந்தம் பெறுமதி மதிப்பீடு செய்யாமல் மோட்டார் வாகனங்களை காப்புறுதி செய்திருத்தல். |